## பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டி

### சுகாதார அமைச்சிற்காக தரம் II பல் வைத்திய நிபுணர்கள் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2020

இலங்கைச் சுகாதார சேவையின் தரம் II பல் வைத்திய நிபுணர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களில் சேவைத் தேவைப்பாட்டின் கீழ் இனங்காணப்பட்டுள்ள பதவிகளை நிரப்புவதற்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியின் ஆணைப்படி, சுகாதார அமைச்சினால், இதில் பந்தி 04 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அறிவித்தலில் ஆங்கில மொழி அறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள, விருப்பத்தைத் தெரிவிப்பதற்கான படிவம் மற்றும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வெற்றிடங்களுக்கான பட்டியல் என்பவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பணிப்பாளர் (பல் வைத்திய சேவைகள்) அலுவலகம் எனும் இடத்தில் ஓகத்து மாதம் 04 ஆம் மற்றும் 5 ஆந் திகதிகளில் காலை 9.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேற்படி திகதி வரையும் பணிப்பாளர் (பல் வைத்திய சேவைகள்) அலுவலகத்தின் அலுவலர்கள் தமது சான்றிதழ்களை சரிபார்ப்பதற்கும் மற்றும் சேவை நிலையங்களுக்கான விருப்பத்தைக் குறிப்பதற்கும் உங்களுக்கு உதவுவார்கள். இதற்கான திகதி மற்றும் நேரங்களை ஒதுக்குவதற்கும் மற்றும் மேலதிக விபரங்களுக்கும் நீங்கள் 011-2692846 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பணிப்பாளர் (பல் வைத்திய சேவைகள்) அலுவலகத்தினை தொடர்பு கொள்ளலாம்.

02. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 03/2006 இன் பிரகாரம், இந்தப் பதவிக்குரிய சம்பள அளவு மாதாந்தம் ரூபா 52,955.00-645 x 4-1,335 x 3-1,345 x 7-1,630 x 2-2,170 x 16- ரூபா 104,355.00 (SL-2-2016) ஆகும். அதற்கும் மேலாக,அரசாங்க மற்றும் திணைக்கள சுற்றுநிருபங்களின் பிரகாரம் வழங்கப்படும் படிக் கொடுப்பனவுகளுக்கும் இவர்கள் உரித்துடையவர்கள் ஆவார்கள். மேலும், இந்தச் சம்பள அளவில் நான்காவது சம்பளபடி நிலை எட்டுவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

03. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்படும் ஏதேனும் கொள்கைத் தீரமானத்திற்கு நீர் உட்படுவீர்கள். மேலும் உமது நியமனம் நியமனத் திகதியிலிருந்து மூன்று (03) வருடங்களுக்கு தகுதிகாண் நிலையில் வைக்கப்படும். அத்துடன் பொதுச் சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள் மற்றும் நடைமுறை விதிகள், தாபனக் கோவையின் ஏற்பாடுகள், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றிற்கும் நீங்கள் உட்படுவீர்கள். மேலும் 2014.01.21 ஆந் திகதிய பொ.நி. சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம், நியமனத் திகதியிலிருந்து ஐந்து வருடம் முடிவதற்கு முன்னர் அரசகரும மொழியில் தேர்ச்சி பெறுவதற்கு நீர் வேண்டப்படுவீர். அவ்வாறு சித்தி பெறத் தவறினால், உமது சம்பள ஏற்றம் நிறுத்தப்படும்.

04. இந்த நியமனம் தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறமையடிப்படையிலான தகுதிப் பட்டியல் (Merit List) பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து பல் மருத்துவத்தில் பி.டி.எஸ். பட்டத்தினை பெற்றுக் கொண்ட பல் வைத்திய நிபுணர்கள் தொடர்பில் பேராதனைப் பல்கலைகழகத்தின் பல் விஞ்ஞானபீடம் வழங்கிய தகுதிப் பட்டியல் மற்றும் பல் மருத்துவத்தில் வெளிநாட்டு பி.டி.எஸ். பட்டத்தினை வைத்திருப்பவர்கள் தொடர்பில் இலங்கை மருத்துவ சபையினால் வழங்கப்பட்ட தகுதிப் பட்டியல் என்பவற்றின் அடிப்படையில் நியமிக்கப்படும்.

05. பட்டதாரிகளின் விண்ணப்பங்கள் திறமைப்பட்டியலின் ஒழுங்கு வரிசையின் படி கவனத்திற் கொள்ளப்படும்.

06. விண்ணப்பதாரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நகல் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். அவற்றின் மூலப்பிரதிகள் சரிபார்ப்பதற்காக ஓகத்து மாதம் 04 ஆம் மற்றும் 5 ஆந் திகதிகளில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

அ) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கையொப்பத்துடன் உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விருப்பத்தினைத் தெரிவிக்கும் படிவம்.

ஆ) பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் மூன்று (03) பிரதிகள்.

இ) இலங்கை மருத்துவ சபையின் பதிவுச் சான்றிதழின் மூன்று (03) பிரதிகள்.

ஈ) தேசிய ஆளடையாளஅட்டையின் இரு பக்கங்களையும் காண்பிக்கும் படியாக மூன்று (03) பிரதிகள்.

07. தகுதிப் பட்டியல், வெற்றிடம் தொடர்பான பட்டியல், பல் வைத்திய நிபுணர்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான அறிவித்தல் மற்றும் விருப்பத்தைத் தெரிவிக்கும் படிவம் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் அல்லது பணிப்பாளர் (பல் வைத்திய சேவைகள்) அலுவலகம் ஆகியவற்றிலிருந்து விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ளலாம்.

